செய்தி வெளியீடு **நாள் : 12.07.2024**

மாண்புமிகு அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 2024-2025ஆம் ஆண்டின் புதிய அறிவிப்புகளை செயல்படுத்தும் விதமாக சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது..

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (12.7.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் 2024-2025ஆம் ஆண்டின் புதிய அறிவிப்புகளை செயல்படுத்தும் விதமாக சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் மானியக் கோரிக்கையின்போது 2024-2025ஆம் ஆண்டில் அறிவித்த புதிய அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில், சென்னை பெருநகர் பகுதியில் 10 பொது நூலகங்கள் மின்-வழி கற்றல் மற்றும் பகிர்ந்த பணியிட (Co-working Space) மையங்களாக மேம்படுத்துவது குறித்து பொது நூலக இயக்கக அலுவலர்களுடனும், சென்னைப் பெருநகர் பகுதிகளில் அமைந்துள்ள முக்கிய போக்குவரத்து சமிக்ஞைகள் (Traffic Signals) சூரிய சக்தியில் இயங்கும் வகையில் அமைப்பது குறித்து பெருநகர சென்னை காவல் துறை அலுவலர்களுடனும், நெடுஞ்சாலை துறை அலுவலர்களுடனும் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி.ஆர்.லலிதா,

Verified RealEstate ™

இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை காவல் கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) திரு.ர.சுதாகர், இ.கா.ப., அவர்கள், இணை இயக்குநர் (பொது நூலக இயக்ககம்) திரு.இளங்கோ சந்திரகுமார், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர் (இயக்கம்) திரு.ஜி.செல்வன், மாநகராட்சி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் (ம) உடமை) திரு.ஜி.சரவணமூர்த்தி, நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) திரு.டி.சிற்றரசு, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Verified RealEstate